பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
26 05 2025 MONDAY 7 15 PM

வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

- தீவிரவாதத்தை ஒடுக்குவதில் சமரசம் என்ற பேச்சுக்கே இடமில்லை என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.
- பாகிஸ்தானில் தீவிரவாத அமைப்புகள் வெளிப்படையாக செயல்பட்டு வருவதாக வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.
- நாடுமுழுவதும் மருத்துவ கட்டமைப்பு வசதிகள், முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு மேம்படுத்தப்பட்டிருப்பதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.
- அமைதி பேச்சுகளுக்கு ரஷ்யா – யுக்ரைன் உரிய ஒத்துழைப்பு அளிக்கவில்லை என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது
- உலக பாரா தடகள கிராண்ட்ஃப்ரீ போட்டியில் இந்தியாவின் Mahendra Gurjar தங்கப்பதக்கம் வென்று வரலாற்றுச் சாதனை படைத்தார்.

>>>>><<<<<

தீவிரவாதத்தை ஒடுக்குவதில் சமரசம் என்ற பேச்சுக்கே இடமில்லை என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

குஜராத் மாநிலம், Bhuj-ல் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை தொடங்கி வைத்ததோடு, புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி அவர் உரையாற்றினார்.

பாகிஸ்தான் போன்ற நாடுகள் தீவிரவாதத்தை சுற்றுலா போல் கருதுவதாக அவர் குறை கூறினார்.

உலக அமைதிக்கும், பாதுகாப்பிற்கும் இது மிகப் பெரிய அச்சுறுதலாக உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

தீவிரவாதத்தை ஒடுக்குவதில் இந்தியாவின் உறுதிப்பாட்டை, ஆப்பரேஷன் சிந்தூர் மூலம் உலக நாடுகள் உணர்ந்துள்ளதாக அவர் கூறினார்.

பஹல்காம் தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு ஜம்மு காஷ்மீர் பகுதிகளில் உள்ள தீவிரவாத முகாம்கள் ஆப்பரேஷன் சிந்தூர் மூலம் துல்லியமாக தகர்க்கப்பட்டதாக பிரதமர் தெரிவித்தார்.

நமது பாதுகாப்புப் படைகளின் திறனை இது வெளிப்படுத்தியுள்ளதாகவும் அவர் கூறினார்.

தீவிரவாதத்திற்கு எதிராக பாகிஸ்தான் நடவடிக்கை எடுக்காததன் காரணமாகத் தான் பதிலடி கொடுப்பதற்காகாக நமது படைகளுக்கு முழுசுதந்திரம் வழங்கியதாக அவர் தெரிவித்தார்.

பொதுமக்களுக்கு எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தாமல், தீவிரவாத அமைப்புகளையும், தீவிரவாதிகளை மட்டுமே குறிவைத்து நமது படையினர் துல்லியமாக தாக்குதல் நடத்தியதாகவும் அவர் தெரிவித்தார்.

எல்லையை தாண்டாமல் பயங்கரவாத முகாம்களை அழிக்க முடியும் என்பதை நமது படையினர் உணர்த்தியுள்ளதாகவும் திரு. நரேந்திர மோடி கூறினார்.

>>>>><<<<<

ஆப்பரேஷன் சிந்தூர் குறித்தும், தீவிரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் நிலைப்பாட்டை எடுத்துரைப்பதற்காகவும், மத்திய அரசால் நியமிக்கப்பட்ட 7 அனைத்துக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு பல்வேறு நாடுகளுக்கு சென்றுள்ளது.

ஐக்கிய ஜனதா தள் உறுப்பினர் திரு. சஞ்சய்குமார் ஜா தலைமையிலான குழு தென்கொரியா சென்றடைந்தது.

சியோலில் அந்நாட்டு தலைவர்களிடம் இந்தியாவின் நிலைப்பாட்டை இக்குழுவினர் எடுத்துரைத்தனர்.

பாகிஸ்தான் தீவிரவாதத்திற்கு தொடர்ந்து ஆதரவளித்து வருவதாக கூறிய இக்குழுவினர், பஹல்காம் தாக்குதல் குறித்தும், இதற்கு இந்தியா கொடுத்த பதிலடி குறித்தும் விளக்கினர்.

ஐ.நா பாதுகாப்புக் குழு உள்ளிட்ட சர்வதேச அமைப்புகள், தீவிரவாதத்தை ஒடுக்குவதற்கு ஒருங்கிணைந்து செயலாற்ற வேண்டும் என்று திரு. சஞ்சய்குமார் ஜா வலியுறுத்தினார்.

காங்கிரஸ் உறுப்பினர் திரு. சசிதரூர் தலைமையிலான குழுவினர் கயானாவில் அந்நாட்டு பிரதமருடன் ஆலோசனை நடத்தினர்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய திரு. சசிதரூர், தீவிரவாதத்தை ஒடுக்க வேண்டும் என்பதில் இந்தியாவின் உறுதியான நிலைப்பாட்டை எடுத்துரைத்ததாக கூறினார்.

கயானா துணை அதிபரிடம் இதுகுறித்து விரிவாக விளக்கியதாகவும், இந்தியாவின் நிலைப்பாட்டிற்கு அந்நாடு ஆதரவு தெரிவித்ததாகவும் திரு. சசிதரூர் தெரிவித்தார்.

கயானா பிரதமர் திரு. Mark Anthony Phillips, தீவிரவாத்தை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது என்றார்.

தீவிரவாதத்தை ஒடுக்குவதற்கான அனைத்து நடவடிக்கைகளுக்கும் கயானா ஆதரவளிக்கும் என்று அவர் கூறினார்.

பிஜேபி உறுப்பினர் திரு. ரவிசங்கர் பிரசாத் தலைமையிலான குழுவினர் இன்று பிரான்ஸ் சென்றடைந்தனர்.

பாரிஸில் அந்நாட்டு அரசிடம் இந்தியாவின் நிலைப்பாட்டை எடுத்துரைத்தனர்.

>>>>><<<<<

பாகிஸ்தானின் பெரிய மற்றும் சிறிய நகரங்களில் தீவிரவாத அமைப்புகள் வெளிப்படையாக செயல்பட்டு வருவதாக வெளியுறவு அமைச்சர் திரு. ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

ஜெர்மனி நாளிதழ் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் அவர் இதனை தெரிவித்தார்.

பாகிஸ்தான் ஆதரவு மற்றும் நிதியுதவியுடன் இந்த தீவிரவாத அமைப்புகள் செயல்படுவதாகவும், பின்னர் இதில் பயிற்சி பெற்றவர்கள் அந்நாட்டு ராணுவத்தால் பயன்படுத்தப்படுவதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

பாகிஸ்தான் ஆதரவிலான தீவிரவாத செயல்களுக்கு உரிய பதிலடி கொடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

ஆப்பரேஷன் சிந்தூர் இதனை பாகிஸ்தானுக்கு உணர்த்தியுள்ளதாகவும் திரு. ஜெய்சங்கர் கூறினார்.

>>>>><<<<<

பாகிஸ்தானைச் சேர்ந்த உளவுத்துறை அதிகாரிகளுக்கு முக்கிய தகவல்களை அளித்ததற்காக மத்திய ரிசர்வ் காவல்படையைச் சேர்ந்த ஒருவரை தேசிய புலனாய்வு அமைப்பு கைது செய்துள்ளது.

நாட்டின் பாதுகாப்பு தொடர்பான முக்கிய அம்சங்களை இரண்டு ஆண்டுகளாக இவர் வழங்கி வந்தது தெரியவந்ததை அடுத்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பாட்டியாலா சிறப்பு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட அவர், தேசிய புலனாய்வு அமைப்பின் காவலில் உள்ளதாகவும், அவரிடம் தொடர்ந்து விசாரணை நடைபெற்று வருவதாகவும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>><<<<<

தீவிரவாதம் ஒடுக்கப்பட வேண்டும் என்பதில் இந்தியா ஒருமித்த கருத்தை கொண்டிருப்பதாக குடியரசு துணைத்தலைவர் திரு. ஜெக்தீப் தங்கர் கூறியுள்ளார்.

மத்தியப்பிரதேசத்தின் Narsinghpur-ல் விவசாயிகள் பங்கேற்ற மூன்று நாள் மாநாட்டின் தொடக்க விழாவில் பங்கேற்று அவர் பேசினார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி, ஆப்பரேஷன் சிந்தூர் மூலம் தீவிரவாதத்திற்கு உரிய பதிலடி கொடுத்துள்ளதாக அவர் கூறினார்.

நமது பாதுகாப்புப் படையினரின் துல்லியமான தாக்குதலை கண்டு நாடே பெருமிதம் கொள்வதாகவும் அவர் தெரிவித்தார்.

விவசாயிகள், வேளாண் விளைபொருட்களை உற்பத்தி செய்வதோடு மட்டும் நின்று விடாமல், அதனை உரிய விலைக்கு விற்பதற்கான நடவடிக்கைகளிலும் ஈடுபட வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார்.

இதன்மூலம் விவசாயிகளின் வருவாய் அதிகரிக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

விவசாயிகள் நலனுக்காக மத்திய அரசு செயல்படுத்தி வரும் திட்டங்களையும் திரு. ஜெகதீப் தங்கர் பட்டியலிட்டார்.

>>>>><<<<<

நாடுமுழுவதும் மருத்துவ கட்டமைப்பு வசதிகள், முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு மேம்படுத்தப்பட்டிருப்பதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

நாக்பூரில் உள்ள புற்றுநோய் மருத்துவமனையில், நோயாளிகளின் உறவினர்கள் தங்கும் விடுதிக்கான கட்டுமானப் பணிகளை இன்று தொடங்கி வைத்து அவர் பேசினார்.

மருத்துவப் படிப்புகளுக்கான எண்ணிக்கை வெகுவாக அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின் கீழ், 5 லட்சம் ரூபாய் மதிப்பிலான இலவச சிகிச்சை, 60 கோடிக்கும் மேற்பட்ட ஏழை குடும்பங்களுக்கு வழங்கப்பட்டு வருவதாக திரு. அமித் ஷா கூறினார்.

>>>>><<<<<

மக்கள் பிரதிநிதிகள் ஒருங்கிணைந்து செயல்பட்டால், உரிய பலன் கிடைக்கும் என்று உத்தரபிரதேச முதலமைச்சர் திரு. யோகி ஆதித்யநாத் கூறியுள்ளார்.

Sant Kabir Nagar-ல் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், மக்கள் நலனுக்காக பிஜேபி உறுப்பினர்கள், கிராமப்புறங்கள், நகர்ப்புறங்கள் மற்றும் பெருநகரங்களில் ஒருங்கிணைந்து பணியாற்றி வருவதாக தெரிவித்தார்.

இதன் காரணமாக, வளர்ச்சித் திட்டங்கள் மக்களை எளிதில் சென்றடைவதாகவும் அவர் கூறினார்.

சர்வதேச தரத்திற்கு இணையான கட்டமைப்பு வசதிகள் உத்தரபிரதேசத்தில் ஏற்படுத்தப்பட்டு வருவதாகவும் திரு. யோகி ஆதித்யநாத் தெரிவித்தார்.

>>>>><<<<<

புதுச்சேரியில் தூய்மைப் பணியாளர்களுக்கான சிறப்பு திறன் மேம்பாட்டு பயிற்சி முகாமை முதலமைச்சர் திரு. என். ரங்கசாமி இன்று தொடங்கி வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில், தூய்மைப் பணிகளை மேற்கொள்ளும் தானியங்கி இயந்திரத்தையும் அவர் அறிமுகப்படுத்தினார்.

தூய்மைப் பணியாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதில் புதுச்சேரி அரசு உறுதியுடன் இருப்பதாக திரு. என். ரங்கசாமி தெரிவித்தார்.

>>>>><<<<<

ஆந்திராவில் நேரிட்ட சாலை விபத்தில் 4 பேர் உயிரிழந்தனர்.

Kovver-லிருந்து Diwan Cheruvu நோக்கி சென்று கொண்டிருந்த கார், லாரியின் மீது மோதியதில் இந்த விபத்து நேரிட்டதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

>>>>><<<<<

ரஷ்யா – யுக்ரைன் இடையேயான பிரச்சினைக்கு தீர்வு காண மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளுக்கு இரு நாடுகளும் உரிய ஒத்துழைப்பு அளிக்கவில்லை என்று அமெரிக்க அதிபர் திரு. டொனால்டு ட்ரம்ப் கூறியுள்ளார்.

யுக்ரைன் மீது ரஷ்யா நடத்திய வான்வழி தாக்குதலை அடுத்து, திரு. டொனால்டு ட்ரம்ப் இந்த கருத்தை தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே, யுக்ரைன் நடத்திய தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கப்பட்டதாக ரஷ்யா கூறியுள்ளது.

ரஷ்யாவின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் அதிபர் திரு. விளாடிமிர் புட்டின் மேற்கொள்வார் என்று அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

யுக்ரைனின் 26 ட்ரோன்கள் சுட்டு வீழ்த்தப்பட்டதாகவும் ரஷ்யா கூறியுள்ளது.

இருப்பினும், ரஷ்யா தான் தாக்குதலை நடத்தியதாக யுக்ரைன் கூறியுள்ளது.

>>>>><<<<<

தென்மேற்குப் பருவமழை மும்பையில் இன்று தொடங்கியது.

75 ஆண்டுகளுக்குப் பின்னர் பருவமழை 15 நாட்களுக்கு முன்னர் தொடங்குவது இதுவே முதல்முறை என்று வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

வழக்கமாக தென்மேற்குப் பருவமழை மும்பையில், ஜூன் மாதம் 11ஆம் தேதி தொடங்கும் நிலையில், தற்போது முன்கூட்டியே தொடங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே, மஹாராஷ்ட்ராவின் பல்வேறு பகுதிகளில கனமழை பெய்து வருகிறது.

மழையினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் ஆய்வினை மேற்கொண்டு உரிய நிவாரண உதவிகளை வழங்குமாறு அம்மாநில முதலமைச்சர் திரு. தேவேந்திர ஃபட்னவிஸ் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

>>>>><<<<<

உலக பாரா தடகள கிராண்ட்ஃப்ரீ போட்டியில் இந்தியாவின் Mahendra Gurjar தங்கப்பதக்கம் வென்று வரலாற்றுச் சாதனை படைத்தார்.

சுவிட்சர்லாந்தில் நடைபெற்ற இப்போட்டியின் ஈட்டி எறிதல் பிரிவில் புதிய உலக சாதனையுடன் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

>>>>><<<<<

உலக கோப்பை ஜூனியர் துப்பாக்கிச் சுடும் போட்டியில் இந்தியாவின் Tejaswani தங்கப்பதக்கம் வென்றார்.

ஜெர்மனியின் Suhl-ல் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் 25 மீட்டர் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

>>>>><<<<<

நான்கு நாடுகளுக்கு இடையேயான மகளிர் ஜூனியர் ஹாக்கிப் போட்டியில் இந்தியா 3-2 என்ற கோல்கணக்கில் Uruguay–வை வென்றது.

>>>>>END<<<<<